## முன் மாதிரி இரண்டாம் இடைப் பருவத் தேர்வு --- 1

## மேல்நிலை முதலாம் ஆண்டு

## வணிகவியல்

நேரம் : 1.15 மணி மதிப்பெண் : 45

### பகுதி ---- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** $10 \times 1 = 10$

1. சமூகப் பொறுப்புணர்வு வணிகத்தில் ------------- யில் பண்டங்களை வழங்குகிறது.
   அ) அதிக விலை ஆ) குறைந்த விலை இ) நியாயமான விலை ஈ) மிதமான விலை

2. உட்புறநிதி மூலத்திற்கு எடுத்துக்காட்டு --------
   அ) கடனாளிகளிடமிருந்து பெறப்படும் தொகை ஆ) வணிக வங்கி கடன்
   இ) பங்கு வெளியீட்டின்மூலம் பெறப்படும் தொகை
   ஈ) வணிக நிறுவனத்திற்குள் திரட்டப்படும் நிதி

3. ----------------- வைத்திருப்பவருக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு
   அ) கடனீட்டுப்பத்திரம் ஆ) முன்னுரிமைப் பங்குகள்
   இ) நேர்மைப் பங்குகள் ஈ) பத்திரங்கள்

4. அமெரிக்க சந்தை தவிர்த்து, உலகச் சந்தையில் வெளியிடப்படும் வைப்பு இரசீது -----------
   அ) உலகளாவிய வைப்பு இரசீது ஆ) பன்னாட்டு வைப்பு இரசீது
   இ) வெளிச்சந்தை வைப்பு இரசீது ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

5. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு
   அ) 2004 ஆ) 2007 இ) 2006 ஈ) 2008

6. உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே இணைப்புச்சங்கிலியாக இருப்பது -----------
   அ) வியாபாரம் ஆ) தொழிற்சாலை இ) வணிகம் ஈ) வர்த்தகம்

7. மொத்த வியாபாரிகள் ------------- பொருள்களை வாங்கி விற்பர்
   அ) சிறிய அளவில் ஆ) பெரிய அளவில்
   இ) நடுத்தர அளவில் ஈ) வரையறுக்கப்பட்டஅளவில்

8. சரியான கூற்று எது?
   அ) சில்லறை வியாபாரிகள் ஒரே வகைப் பொருட்களின் வணிகத்தில் ஈடுபட்டிருப்பார்.
   ஆ) சில்லறை வியாபாரிகள், உற்பத்தியாளர்களிடம் நெருங்கிய தொடர்பில் இருப்பர்
   இ) முக்கியச் சந்தைப் பகுதிக்கு உள்ளேயோ அல்லது அருகிலேயோ சில்லறை விற்பனை நிலையங்கள் இடம் பெறும்.
   ஈ) சில்லறை வியாபாரிகள், மொத்த வியாபாரியிடம் ரொக்க அடிப்படையில் சரக்குகளை வாங்கி, நுகர்வோருக்கு கடனிற்கு விற்கின்றனர்.

9. நிரந்தர இடமின்றி வெவ்வேறு இடங்களுச் சென்று குறைந்த விலையுள்ள பொருட்களை வியாபாரம் செய்வோரை ------------ என்பர்.
   அ) மடங்கு கடைகள் ஆ) முகவர்கள்
   இ) தெருக்கடை வியாபாரிகள் ஈ) சுற்றாடும் வியாபாரிகள்

10. சுற்றாடும் வியாபாரிகளை ------------- என்றும் அழைப்பர்.

அ) நகரும் வியாபாரிகள் ஆ) இடம் பெயர் வியாபாரிகள் இ) கூவி விற்போர்

ஈ) சுமைதூக்கும் வியாபாரிகள்

## பகுதி - II

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 16 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4 × 2 = 8

11. கடன் பத்திரங்கள் பற்றி குறிப்பு வரைக.
12. குறியீடு என்பதன் பொருள் என்ன?
13. இடைநிலையர் என்பவர் யார்?
14. கடனாகப் பெறப்பட்ட நிதியின் கீழ் வரும் எதேனும் இரண்டு நிதி ஆதாரங்களைக் குறிப்பிடுக.
15. சிறப்புப் பண்டகச்சாலைகள் என்றால் என்ன?
16. சட்டத்தால் குறிப்பிடப்படாத மற்றும் சமுதாயத்தால் எதிர்பார்க்கப்படும் பொறுப்புணர்வு எது?

## பகுதி - III

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 22 -க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4× 3 = 12

17. குறு நிறுவனங்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.
18. அடகு கடன் என்றால் என்ன?
19. அமெரிக்க வைப்பு இரசீதின் ஏதேனும் மூன்று சிறப்பம்சங்களை விளக்குக.
20. மொத்த வியாபாரிகளின் பண்பு நலன்கள் ஏதேனும் மூன்றினை எழுது.
21. சுய உதவி குழுக்களின் ஏதேனும் மூன்று சிறப்பம்சங்களை விளக்குக
22. சூரத் நகரின் வைர வியாபாரிகள் தெற்கு ஆப்ரிக்காவில் இருந்து துண்டிக்கப்படாத வைரங்களை வாங்கி, அவற்றை துண்டாக்கி, பட்டைதீட்டி, ஆம்ஸ்டர்டம் நகரில் உள்ள பன்னாட்டு வைரச் சந்தைக்கு அனுப்பி வைக்கின்றனர். இது எவ்வகை வியாபாரத்திற்கு எடுத்துக்காட்டு? மேற்கண்ட வியாபாரத்தில் சிறப்பாக செயல்படும் மையங்களை ( நாடுகளை ) குறிபிடவும்

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 × 5 = 15

23. உலகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

( அல்லது )

மொத்த வியாபாரிகளின் பணிகள் யாவை?

24. சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.

( அல்லது )

சுய உதவி குழுக்களின் நோக்கங்கள் யாவை?

25. குறிப்பு வரைக: அ) இருத்திவைக்கப்பட்டஆதாயம் ஆ) குத்தகைநிதி

( அல்லது )

தொழிலின் சமூகப் பொறுப்புணர்வின் மூலம் நன்மை பெறும் பின்வரும் குழுக்களை விவரி?

1) முதலீட்டாளர்கள் மீதான பொறுப்புணர்வு
2) வாடிக்கயாளர் தொடர்பான பொறுப்புணர்வு